மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 52, திரு. மா. சுந்தரதாஸ், மாண்புமிகு வனம் மற்றும் மீன் வளத் துறை அமைச்சர்.

மீனவர்களுக்கு இலவச இன்சூரன்ஸ் திட்டம்.

52—

*1044— திரு. மா. சுந்தரதாஸ் :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மீன்பிடிக்கும் தொழிலை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் மீனவத் தொழிலாளர்களுக்கு அரசு சார்பில் இலவச இன்சூரன்ஸ் திட்டம் செயல்படுத்த உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம். செயல்படுத்தப்படுகிறது.

(ஆ) 1-1-1984 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறும்போது அத்தகைய திட்டங்கள் செயல்பட்டு வருவதாகச் சொல்கிறார்கள். ஆனால் பல்வேறு பகுதிகளிலே செயல்படுத்தப்படவில்லை. இதை கேரளாவிலே ஒழுங்கான முறையிலே செய்து கொண்டிருக்கிறார்கள். என்னுடைய கன்னியாகுமரி மாவட்டத்திலே, குறிப்பாக இந்தத் திட்டம் 84-லேயிருந்து செயல்முறையிலே இருப்பதாகச் சொன்னாலும்கூட, பல பகுதிகளிலே இத்திட்டம் அமல்படுத்தப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? இத்திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்கிற புகார் அரசுக்கு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஏழைகளின் ஆட்சி. ஏழைகளின் நலனில் அக்கறை கொண்ட அரசு. அவரது தாயுள்ளம் ஏழைகளின் கண்ணீரைத் துடைக்கும். அறிஞர் அண்ணா கூறியதுபோல ''ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணும்'' புரட்சித் தலைவி அவர்களின் புனிதமான ஆட்சியில், முன்பு ஒரு மீனவ

ரிடம் 9 ரூபாய் பிரிமியம் வாங்கப்பட்டு அதன்மூலம் கிட்டத்தட்ட அவருக்கு காப்புறுதித் திட்டத்தின் கீழ் 15 ஆயிரம் தரப்பட்டது. ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் ரூபாய் 10.84 பிரிமியம் பெற்று, கிட்டத்தட்ட 21 ஆயிரம் ரூபாய், மீனவருக்குக் காப்புறுதித் தொகையாக வழங்கப்படுகிறது. மேலும், இதுவரையில் காப்புறுதி செய்யப்பட்ட மீனவர்களின் எண்ணிக்கை 1,66,312 ஆகும். அதேபோல, இதுவரை 888 மீனவர்கள் இதனால் பயனடைந்து உள்ளனர். இதுவரை வழங்கப்பட்ட நிவாரணம் 1,25,05,000 ரூபாய் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், அவருடைய கேள்வியிலே ஒரு பகுதி, 84-லே இருந்து இந்தத் திட்டம் செயல்பட்டு வந்தாலும், கன்னியாகுமரி மாவட்டத்தின் பல பகுதிகளில் இது செயல்படவில்லை என்கிற புகார் அரசுக்கு வந்துள்ளதா என்பது. அதற்கு நீங்கள் பதில் வழங்கவில்லை.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து அவர் புகார் கொடுத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-05

திரு. மா. சுந்தரதாஸ்: பேரவைத் தலைவரவர்களே, மீனவர் கூட்டுறவு சொசைட்டிகளிலே அங்கத்தினர்களாக இல்லாமலிருந்தால் அவர்களுக்கு முன்பு 15,000 கொடுத்தது. நம்முடைய ஆட்சியிலே 21,000 ரூபாய் கொடுக்கின்ற அந்தப் பணம் கிடைக்காமல் இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகையால் கட்டாயமாக சொசைட்டிகளில் உறுப்பினராகச் சேர்க்கவும், அதேபோல, காப்புறுதித் திட்டத்திலே சேர்க்கவுமான பணியை அரசு அதிகாரிகள் முனைந்து செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவியின் ஆட்சியில் நிச்சயமாகச் செய்வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, குமரி மாவட்டத்திலுள்ள உள்நாட்டு மீனவர்களுக்கு—அதாவது குளத்திலே குத்தகை எடுத்து ஃபிஷ் ஃபார்மிலே வேலைபார்க்கும் மீனவர்களுக்கு அரசு அறிவித்த கடலில் செல்லும் மற்ற மீனவர்களுக்கு உள்ள எந்தச் சலுகையும் கிடைக்கவில்லை. எனவே, மீனவர்களுக்கு நிறையச் சலுகைகளைக் கொடுத்திருக்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு முதல்வரவர்களின் அரசு இதுபற்றி ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால், புரட்சித் தலைவியின் அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 53, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர்.

கால்நடை மருத்துவமனை

53—

*1314 — திரு. பே. தர்மலிங்கம் :

மாண்புமிகு வனம் மற்றும் மீனளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கால்நடைகள் அதிகமாக உள்ள பாளையங்கோட்டை தொகுதியில் மூன்று பஞ்சாயத்துக்களுக்கு ஒரு கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் நடைமுறைப்படுத்தப் படும் ?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இந்த அளவில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

—